தொகுதி ௨
சித்திரம் 7

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்



# ஆசீர்வதிக்கப்பட்ட வாள்

www.ponnivala.com


© 2012 Ponnivala Publishing




தொகுதி2
சித்திரம்-07

## தெய்வசபைக் கிளிகள்

பொன்னிவள நாட்டு சகோதரர்களின் தங்கை, தனது தனிமை பொழுதுகளில் விளையாடி மகிழ, எதிரிகளின் காட்டில் உள்ள அழகான ஜோடிக்கிளிகளை பிடித்து தருமாறு அண்ணன்களிடம் கேட்கிறாள். அவர்களும் அதற்கு சம்மதித்து ஒரு பிரத்தியோகமான வலையை தயார் செய்தனர்...





மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா


சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்



© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.



சோழ மன்னரின் உத்தரவை ஏற்று கப்பம் கட்ட சென்ற அண்ணனை சிறையிலடைத்து, மீட்டு வரச் சென்ற என்னையும் சேர்த்து தந்திரமாக கொலை செய்ய போட்ட எல்லா சதித் திட்டங்களையும் முறியடித்து...
நயவஞ்சகம் செய்த சோழனையும், அவன் காவல் வீரர்களையும் கொன்றழித்து, அரண்மனையையும் உருத் தெரியாமல் சிதைத்து விட்டோம்.
இந்த நாசகார பங்காளிகள் சோழனுக்கு துர்போதனை கூறி அவன் அழிவுக்கு வழி வகுத்ததும் அல்லாமல் தாங்களும் மாண்டு போயினர். இத்தோடு எம்மை பிடித்திருந்த அனைத்து தொல்லைகளும் நீங்கின. இனி பொன்னிவள நாட்டை நல்லாட்சி செய்யலாம்.

அமைதியுடன் நீதிவழுவாத நல்லாட்சி நடக்கும் பொன்னிவள நாட்டின் ஒரு காலைப் பொழுதினில் அரண்மனையில் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த தங்காள் கனவு கண்டாள்.




அதை வெட்ட முடியாது அண்ணா!
சாமி! தங்கை உங்கள் இருவரையும் அழைக்கிறார்.
என்ன தங்காள்?
எதற்காக எங்களை அழைத்தாய்?
அண்ணா! நான் அரண்மனையில் பெரும்பாலும் தனிமையிலேயே இருக்கிறேன்.
அவ்வேளைகளில் என்னோடு விளையாடி பொழுதுகளை கழிக்க கிளிகள் வேண்டும்!


வீரப்பூரின் மூலையில் வெள்ளியங்கிரித் தடாகத்திற்கு பக்கத்தில் பெரிய ஆலமரம் ஒன்று இருக்கிறது.
அம்மரத்திலே ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடிக்கிளிகள் வாழுகின்றன. அவைகளை நம் அரண்மனைக்கு கொண்டு வந்தால் எனக்கு துணையாகவும், பொழுதுகளை இன்பமாக அதனுடன் பேசிக் கழிக்கவும் உதவும்.


தங்காள்! அந்தக் கிளிகள் இருப்பதோ வேட்டுவ பரம்பரைக்கு செந்தமான இடத்தில். வேறு எங்காவது அதே போன்ற கிளிகள் இருக்கின்றனவா? அப்படி என்ன சிறப்பு அவைளில் உள்ளது ?
அண்ணா! இக்கிளிகள் நம் அம்மா இருபத்தியொரு வருடங்கள் தெய்வசபையில் குழந்தை வரம் வேண்டி தவம் இருந்த பொழுது, அவரின் மூக்கில் கூடு கட்டி வாழ்ந்தவை.
அப்படியா! அந்த ஆலமரத்தில் வேறு கிளிகள் ஏதும் உள்ளதா?
ஆமாம் அண்ணா! ஆயிரம் நாட்டு கிளிகள் இருக்கின்றன.


கீ...
கீ...
கீ...
கீ...
கீ...
கீ...
கீ...
கீ...
கீ...


அப்படியா! பின் நாங்கள் எப்படி இந்த கிளிகளை அடையாளம் காண்பது?
அடையாளத்தை நான் சொல்கிறேன் அண்ணா! அவைகளின் சிறகுகளில் பஞ்சவர்ணங்களும் இணைந்து காணப்படும்.




ஆனால்! வேட்டுவர்களுக்கு சொந்தமான நாட்டிலிருந்து அவர்களின் அனுமதியில்லாமல் அதைப் பிடித்து வருவதென்பது முறையாகத் தெரியவில்லை.
அண்ணா! கவலை வேண்டாம். வேட்டுவருடைய நிலத்தில் இருந்தாலும் அக்கிளிகள் அவர்களுக்கு சொந்தமானவையல்ல .
ஆம்! அவை சொர்க்கத்தில் இருந்து பூமிக்கு வந்தவைகள்.



அவைகளை விசேஷமான வலை கொண்டு தான் பிடிக்க வேண்டும். வலையை எதைக் கொண்டு செய்வது?
அண்ணா! வலையை இரும்பால் செய்தால் நன்றாக இருக்கும்.
சரி தங்காள்! நாங்கள் விரைவில் இரும்பு வலையை தயார் செய்து அக்கிளிகளைப் பிடித்து வருகிறோம்.



சகோதரர்கள் இருவரும் சாம்புகனை அழைத்தனர்.
சாம்புகா! தங்காள் தனக்கு வேண்டிய ஒன்றை செய்து தரும்படி கேட்டிருக்கிறாள்.
வேட்டுவரின் பூமியான வீரப்பூரில் உள்ள ஆலமரத்தில் வசிக்கும் அபூர்வ ஜோடிக்கிளிகளை நாம் பிடித்து வரவேண்டுமாம்.
ஆனால்! கிளிக்காக வேட்டுவர்களை எதிர்க்க வேண்டுமா?
சாமி! தங்காள் கேட்பதை செய்து கொடுக்க வேண்டும் என்று உங்கள் பெற்றோர்கள் கூறியது நினைவில்லையா?
சரி சாம்புகா! நமக்கு இரும்பு வலை ஒன்று தேவைப்படுகிறது. தங்கவளநாடு சென்று ஆசாரிகளைக் கூட்டிவா!
சரி சாமி! இப்பொழுதே செல்கிறேன்.
சாம்புகன் தங்கவளநாடு சென்று ஆசாரிகளை அழைத்து வந்தான்.



ஆசாரிகளே! நீங்கள் பெரிய இரும்பு வலை ஒன்றை செய்ய வேண்டும். நாங்கள் அதைக் கொண்டு கிளிவேட்டைக்கு செல்லப் போகிறோம்.
அதற்கு தேவையான இரும்பு எங்களிடம் இருக்கிறது.
இதை வைத்து வலை வேலையைத் தொடங்குங்கள்.
இந்த கொட்டகையை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
சரி சாமி!
ஆசாரிகள் மிகவும் கடினமாக உழைத்தனர்.
ஙங்!



சாமி! இந்த இரும்பு வலை செய்வதற்கு உகந்ததல்ல. வெளியூர் இரும்பு தான் வேண்டும்!
சாம்புகா! அவர்கள் கேட்கும் தரமான இரும்பு எங்கே கிடைக்கும்.
அரசே! நான் ஒரு நாள் வீரப்பூர் சென்றிருந்தேன். அங்கே கருகாளியம்மன் கோவில் கட்டுவதற்காக இரும்புகளை குவித்து வைத்திருந்தார்கள்.
ஆமாம்! கோயில் கட்டி முடிந்து இரும்புகள் மிச்சம் இருப்பதாக நானும் கேள்விப்பட்டேன்.
நான் சென்று வாங்கி வர முயற்சி செய்கிறேன்.
பெண்ணே! நீ சென்று நம்ம பண்டகசாலையிலிருந்து சாம்புகனுக்குக் குடிக்க மதுபானம் கொண்டு வந்து கொடு.
சாம்புகன் தன் துண்டை தலையில் முண்டாசாக கட்டிக்கொண்டு வீரப்பூரை நோக்கி புறப்பட்டான்.


சாம்புகன் காடு மலைகளைக் கடந்து நெடுந்தூரம் நடந்து சென்றான்.
நீண்டதூர பயணத்தின் முடிவில் வேட்டுவ மன்னரின் அரண்மனையை அடைந்தான்.
ஒரு வழியாக வீரப்பூருக்கு வந்து விட்டேன்.


அரண்மனையின் வாயிலில் நின்ற இரண்டு பணிப்பெண்கள் சாம்புகன் வருவதைக் கண்டனர். அதில் ஒருத்தி அவனை பார்த்து பயத்தில் மயங்கி விழுந்தாள்.
ஆ..!
எவ்வளவு பெரிய ஆள்.
ஏய்! எழுந்திரு!
அம்மா! நம் அரண்மனையின் வாசலில் பெரிய மனிதன் ஒருவன் நின்று கொண்டிருக்கிறான்.
எதற்காக வந்தான் என்று கேளுங்கள்?
சரி தாயே!
யாரப்பா நீ? எதற்காக இங்கே வந்திருக்கிறாய்?
பெண்ணே! நான் பொன்னிவள நாட்டின் அரண்மனைக் காவலாளி. உங்கள் அரசியிடம் நான் பேச வேண்டும். தயவுசெய்து அவர்களை அழைத்து வாருகிறீர்களா?



பணிப்பெண்கள் அரசியிடம் சென்று விஷயத்தை தெரியப்படுத்தினர்.
அம்மா! அவர் பொன்னிவள நாட்டிலிருந்து வந்திருக்கிறார். உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம்.
இதோ!நான் சென்று பார்க்கிறேன்.
வாப்பா காவலாளி!
ஏதும் முக்கிய விசயம் பேச வேண்டுமா?
தாயே! பொன்னிவள நாட்டில் நல்லமழை பெய்ததால் எல்லோரும் விவசாயம் செய்கின்றனர். அதனால் கலப்பை, மண்வெட்டி, கத்தி, கடப்பாரை போன்ற கருவிகள் அதிகளவில் தேவைப்படுகிறது.



ஆனால், நாங்கள் திறமையான வேட்டைக்காரர்களே அன்றி உங்களுக்கு தேவையான விவசாய கருவிகள் எங்களிடம் இல்லையே!
எங்களுக்கு உங்களிடம் உள்ள இரும்புகளை தந்துதவ வேண்டும்.
நாங்கள் எதற்காக தரவேண்டும்?
கோபம் வேண்டாம் தாயே! நாங்கள் விரைவிலேயே திருப்பிக் கொடுத்து விடுவோம்.
இரும்பை தருவதற்கு நான் ஒப்புக் கொண்டால் மட்டும் போதாது என் அண்ணனிடமும் அனுமதி கேட்க வேண்டும்.
வேட்டுவ அரசி தன் அண்ணணிடம் அனுமதி கேட்கச் சென்றார்.


அண்ணா! பொன்னிவள நாட்டின் காவலாளி நம்மிடம் உள்ள இரும்பை தந்துதவும் படி கேட்டு வந்துள்ளார்.
விவசாயம் செய்யத் தேவையான கருவிகளை தயாரிக்க வேண்டுமாம்.
விரைவில் திருப்பி கொடுப்பதாகவும் உறுதியளிக்கிறார்.
ஆனால்! அவர்கள் எப்படி திருப்பி தருவார்கள். அந்த கவுண்டர்கள் மிகப் பெரிய மோசக்காரர்கள் ஆயிற்றே.
ஏற்கனவே அந்த கவுண்டர்களுக்கும் நமக்கும் முன் விரோதத்தால் உறவு சுமூகமாக இல்லை. பிறகு எப்படி அவர்களை நம்புவது?
இவரை நம்பி இரும்பை கொடுங்கள். அதை திரும்ப வாங்கித் தருவது என் பொறுப்பு.
சரி! உன் இஷ்டம் போல் செய். ஆனால், இரும்பை திருப்பி தரவில்லை என்றால் நீ தான் அதற்கு பதில் சொல்ல வேண்டும்.


காவல்காரரே! என் அண்ணன் உங்களுக்கு இரும்பைத் கொடுத்தால் திரும்பி வராது என்று கூறி தர மறுக்கிறார்.
தாயே! என்னை நம்பி இரும்பை தாருங்கள். பத்திரமாக திருப்பி கொண்டு வந்து சேர்ப்பது என் பெறுப்பு.
சரி! நான் இரும்பை தருவதற்கு சம்மதிக்கிறேன். ஆனால்! அதை மூன்று நாட்களுக்குள் திருப்பி தந்துவிட வேண்டும். நீ போய் வண்டியைக் கொண்டு வந்து எடுத்து செல்.
நன்றி தாயே!



சாம்புகன் இரும்புகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து கட்டினான்.
ஏய் காவலாளியே! எதற்காக எல்லா இரும்பையும் சேர்த்து கட்டுகிறாய்?
அம்மா! இரும்பின் எடையை தெரிந்து கொள்ளவே சேர்த்து கட்டினேன். அப்போது தான் திருப்பித் தரும் போது எடை குறையாமல் இருக்கும்.
சரி! நாளை வண்டியை கொண்டு வந்து இவைகளை எடுத்து செல்.
சாம்புகன் கூறியதை நம்பிய அரசி அங்கிருந்து புறப்பட்டாள்.



ஆனால்! சாம்புகன் அங்கிருந்து செல்லாமல் மகாவிஷ்ணுவை நோக்கி பிராத்தித்தான்.
காஞ்சி நாதனே! வைகுந்த வாசகா! நான் உண்மையில் சிவனின் வரத்தால் பிறந்தவன் என்றால் இந்தப் பெரிய இரும்புக் கட்டு தானே வந்து என் தலை மேல் மெதுவாக அமர வேண்டும்.
விஷ்ணு சாம்புகனின் பிரார்த்தனையைக் கேட்டு அவனுக்கு உதவி புரியலானார்.
விஷ்ணுவின் அருளால் பெரிய இரும்புக்கட்டு காற்றில் மிதந்து வந்து சாம்புகனின் தலை மேல் அமர்ந்தது!


சாம்புகன் இரும்புக்கட்டை சுமந்தபடி பொன்னிவள நாட்டை நோக்கி ஓடினான்.


இடி இடிப்பது போன்ற ஒலி கேட்டு அரண்மனையிலிருந்து வெளியே வந்த சங்கர், அங்கே பெரிய இரும்புக்கட்டை தலையில் சுமந்தபடி சாம்புகன் நிற்பதை பார்த்து வியந்தார்.
சாம்புகா! எதற்காக இவ்வளவு பெரிய இரும்புக் கட்டை தலையில் சுமந்து கொண்டு வந்தாய்?
சாமி! வேட்டுவர்கள் இரும்பு தர ஒப்புக் கொண்டு, என்னை நாளை காலையில் வண்டியை கொண்டு வந்து எடுத்து செல்லுமாறு கூறினார்கள். ஆனால், நாளை ஒருவேளை அவர்களின் மனம் மாறிவிடுமே என எண்ணி இன்றே கொண்டு வந்து விட்டேன்.
இந்த உலகத்தில் உன்னைப் போல் ஒரு காவலாளி யாருக்கும் கிடைக்க மாட்டான்.


ஆசாரிகளே!
இதோ நீங்கள் கேட்ட தரமான
இரும்புகள்.
தடைப்பட்ட வலை
வேலையை ஆசாரிகள்
ஆரம்பித்தார்கள்.
அதை எப்படி செய்ய
வேண்டும் என்று சங்கர்
விளக்கிக் கூறினார்.
வலை மிகவும்
நெருக்கமாக இருக்க வேண்டும்.
அப்போது தான் அகப்பட்ட
கிளிகள் தப்பிச் செல்ல
முடியாது.
ஆசாரிகள் புது இரும்பினை கொண்டு வேலையை தொடர்ந்தனர்.


ஆசாரிகள் வலையை மிகவும் அவதானத்துடன் செய்தனர்.
டிங்!
வேலையை விரைந்து முடிக்க விஷ்ணு உதவினார்.
டிங்!


வேலை முடிந்து வலை தயாரானது. அப்போது இளைய சகோதரன் சங்கரின் மூளையில் புதிய யோசனை ஒன்று தோன்றியது.
அண்ணா! கிளிகளை பிடித்து இங்கே எப்படி கொண்டு வருவது? அவைகளை கொண்டு வர கூண்டு ஒன்று செய்ய வேண்டும்.
ம்..! அருமையான யோசனை தம்பி! நாம் மறுபடியும் ஆசாரிகளை அழைத்து செய்யச் சொல்வோம்.
ஆசாரிகளே! தங்கக்கூண்டு ஒன்று செய்ய வேண்டும்.
கூண்டை தங்க கம்பிகளை கொண்டு இழைத்து அனைத்து பாகங்களும் பளபளப்புடன் அழகாக இருக்க வேண்டும்.
ஆசாரிகள் தங்கக்கூண்டை செய்யத் தெடங்கினார்கள்.


விரைவில் வேலையை முடித்த ஆசாரிகள் கூண்டை எடுத்துச் சென்று ஒப்படைத்தனர்.
பெண்ணே! உள்ளே சென்று ஒரு வள்ளம் முத்து எடுத்து வா!
சாமிகளே! இதோ நீங்கள் கேட்ட கூண்டு.
ஆசாரிகளுக்கு கூலியைக் கொடு.
பணிப்பெண் கூலியாக கொண்டு வந்து ஒரு வள்ளம் முத்தை கொடுத்தாள்.


சாம்புகா! அறுபத்தியாறு ஊர்களுக்கும் சென்று நாங்கள் வரும் வெள்ளிக்கிழமையன்று கிளி வேட்டைக்குச் செல்வதாகவும், அதற்கு வீட்டிற்கு ஒருவர் எங்களுடன் வரவேண்டும் என்றும் கூறிவிட்டு வா.
டம்!
டம்!
டம்!
சாம்புகன் தண்டோரா போட்டபடி ஒவ்வொரு ஊராக சென்று செய்தியை அறிவித்தான்.
டம்!
டம்!
ஆ..! தண்டோரா சத்தமல்லவா இது?
டம்!
டம்!
வரும் வெள்ளிக்கிழமையன்று நம் அரசர்கள் கிளி வேட்டைக்கு செல்கிறார்கள்.
அவர்களுடன் சேர்ந்து செல்ல வீட்டிற்கு ஒரு ஆண்மகனை விநாயகர் கோவிலுக்கு வந்து சேருமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.


சாம்புகன் வேட்டைக்குச் செல்வதற்காக குதிரைகளை தயார் செய்தான். அரசர்களும் தயாரானார்கள்.
அண்ணா! நாம் கிளி வேட்டைக்குச் செல்வதற்கு முன் தங்கை நமது வாளை தொட்டு வணங்கி, வாழ்த்தித் தந்தால் வேட்டை சிறப்பாக அமையுமல்லவா?
கன்னிப்பெண் கையால் வாள் வாங்கிச் செல்வது மிகவும் நல்ல சகுனம்.
நல்ல யோசனை தம்பி! தங்காளை அழைத்து அவள் கையாலே வாங்கிச் செல்லலாம்.


தங்கமே! எங்கள் வாளை தொட்டு ஆசீர்வதித்து எங்களிடம் திருப்பிக் கொடு.
அப்போது தங்காள் தேம்பி அழுதாள்...
என்னருமை அண்ணன்களே!
தங்காள்! ஏதற்காக அழுகிறாய்?


அண்ணன்களே! வரப்போகும் பேராபத்தை அறியாமல் கிளிகளை பிடித்து வரச் சொல்லி விட்டேன். எனக்கு கிளிகளே வேண்டாம்.
நீ என்ன சொல்கிறாய் தங்காள்?
உர்ர்ர்ர...
வேட்டுவ அரசியான வீரதங்காள் அந்த இரண்டு கிளிகளுக்கும் காவலாக ஐயாயிரம் வேங்கைகளையும், ஐயாயிரம் நாகங்களையும் அந்த வனத்திலே நிறுத்தியிருக்கிறாள். அதனால் நீங்கள் அங்கே போக வேண்டாம்.
ஸ்ஸ்ஸ்ஸ்


பார்த்தீர்களா
அண்ணா! இவள் தான் தெய்வசபைக் கிளிகள் வேண்டும் என்று கேட்டாள் ஆனால் இப்போது...
வேண்டாம் என்கிறாள். வெளியே வேட்டைக்கு தயாராக அனைவரும் காத்திருக்கும் போது நாம் முடிவை மாற்றினால்..
அவர்கள் நம்மை மதிக்க மாட்டார்கள். தங்காள்! எங்கள் வாள்களை வாழ்த்திக் கொடு நாங்கள் வேட்டைக்கு புறப்பட வேண்டும்.
அண்ணன்களே! எனக்கு நீங்கள் உயிராபத்து இல்லாமல் நலமுடன் இருந்தாலே போதும். ம்..! பொறுங்கள் வாள்களை வாழ்த்தி தருகிறேன்.


உள்ளே சென்ற தங்காள் வாள்களை வாழ்த்தி கொடுப்பதற்கு முன்பாக விஷ்ணுவை வணங்கினாள்.
பரந்தாமனே! என் ஆசையை நிறைவேற்றுவதற்காக அண்ணன்கள் தெய்வசபை கிளிகளை பிடித்து வரச் செல்கிறார்கள்.
அவர்களுக்கு எந்த ஆபத்தும் நேராது என்றால் வாள்கள் பறந்து வந்து என் கைகளில் சேர வேண்டும்.
ஷ்ஷ்ஷ்
அக்கணமே வாள்கள் இரண்டும் மாயம் செய்தது போல் தங்காளிடம் பறந்து வந்தது.


அண்ணன்களே! இதோ உங்கள் வாள்களை எடுத்து கொள்ளுங்கள்.
தங்காள்! நாங்கள் நாளை காலையில் திரும்பி வந்து விடுவோம்.
டக்கட
டக்கட
டக்கட
பொன்னிவள நாட்டு சகோதரர்கள் வேட்டுவரின் ஊரான வீரப்பூரை நோக்கி புறப்பட்டனர். அங்கே வனங்களில் உள்ள ஆயிரக்கனக்கான கொடிய வேங்கைகளையும், நாகபாம்புகளையும் எப்படி சமாளிக்க போகிறார்கள்? அதேநேரம் வேட்டுவர்கள் தங்களிடம் உள்ள தெய்வசபைக் கிளிகள் பறிபோகப் போகிறது என்று தெரிந்தால், அவர்கள் இவர்களை என்ன செய்வார்கள்?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic19tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-61-0

© 2012 Ponnivala Publishing